சுற்றுநிருபக் கடித இலக்கம்: 07/2015

எனது இலக்கம்: ஓய்/சுற்றுநிருபம்/2015
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
06-11-2015.

அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/
முப்படைத் தளபதிகள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு,

பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 06/2006 இன் படி ஓய்வூதியங்களைச் சீராக்குதல் (2015) துரிதப்படுத்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும் பொருட்டிலான அறிவுறுத்தல்கள்.

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியங்களைச் சீராக்குவதற்காக பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 16/2015 இன் மூலம் குறித்த விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்குச் சமாந்திரமாக 5/2015, 5/2015(I), 5/2105 (II) எனும் ஓய்வூதியச் சுற்றுநிருபங்கள் மூலமும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இச் செயற்பாட்டினைத் துரிதப்படுத்தும் பொருட்டு பிரதேச செயலகங்களில் உள்ள கோவைகள் அடிப்படையில் இணையத் (Online) தொடர்பின் மூலம் ஓய்வூதிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. தற்சமயமாகுகையில் இவ் ஓய்வூதியச் சீராக்கற் செயற்பாடு இறுதிப் படிமுறையினை அடைந்துள்ளதுடன் அதற்காகப் பெற்றுக் கொடுத்த பங்களிப்பினைப் பெறுமதிமிக்கதாகக் கருதுகின்றேன். இச் செயற்பாட்டினுள் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் கருமமாற்றும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இதன் மூலம் வெளியிடப்படுகின்றன என்பதனை அறியத் தருகின்றேன்.

01. ஓய்வூதிய மீளாய்வு விபரங்களை உறுதிப்படுத்திக் கோவையினுள் உள்ளடக்குதல்.

மீளாய்விற்கான உரித்தினைப் பெறும் அனைத்து ஓய்வூதியர்களதும் மீளாய்வுகள் தயாரிக்கப்பட்டுள்ள விபரங்களை கணணி நிகழ்ச்சி மூலம் அச்சிட்டு கோவையினுள் உள்ளடக்குகையில் கீழ்வரும் வண்ணம் கருமமாற்றுதல் வேண்டும்.

- ஓய்வூதிய இலக்கம் மற்றும் ஓய்வூதியரின் பெயர் சரியானது என்பதனைப் பரீட்சித்தல்.
- பதவி, தரம் மற்றும் வகுப்பின் படி சம்பளத் திட்டம் மற்றும் சம்பளப் படிநிலை சரியானது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.
- சேவைக்காலம், சம்பளமற்ற விடுமுறைகள் மற்றும் அதன் படி ஓய்வூதியக் கணிப்பீட்டுக்கான சதவீதம் சரியானதென்பது.
- அதன்படி ஓய்வூதியரிடம் வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம் மற்றும் வழங்கப்பட்ட நிலுவைத் தொகை சரியானதென்பது.
- மேற்குறித்த விடயங்கள் சரியானதெனக் கணக்காளர் உறுதிப்படுத்தியிருத்தல்.

02. ஓய்வூதியத்தினைத் திரும்பவும் மீளாய்வு செய்தல்.

மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்று ஓய்வூதியரது விசாரணையின் படி அல்லது மீள் பரிசீலனை செய்கையில் தவறானது என நிரூபணமாயின் திரும்பவும் அதனை மீளாய்வு செய்கையில் கீழ்வரும் வண்ணம் கருமமாற்றுதல் வேண்டும்.

- மதிப்படுத்தப்பட்ட தரவு மூலத்தில் வழங்கப்பட்டுள்ள வசதிகள் மூலம் (Revise Salary) அவ் ஊதியத்தினைத் மீளாய்வு செய்தல் வேண்டும்.
- திரும்ப மீளாய்வு செய்யும் அனைத்து ஓய்வூதியச் சீராக்கங்களுக்கும் கணக்காளரின் உறுதிப்படுத்தல் கட்டாயமானதாகும்.
- திரும்ப மீளாய்வு செய்யப்படும் அனைத்து ஓய்வூதியங்களதும் கொடுப்பனவின் பின்னர் கணணி நிகழ்ச்சி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பள மாற்றக் கடிதம் மற்றும் தொடர்புறும் கொடுப்பனவு விபரங்கள்

(நிலுவைகள் மற்றும் அடிப்படை ஊதியம்) சரியானதா என்பதனைப் பரீட்சித்து, உறுதிப்படுத்தியதன் பின்னர் ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்குதல் வேண்டும்.

- அவ்வாறே மேலதிகக் கொடுப்பனவொன்று இடம் பெற்றிருப்பின், அத் தொகைகளை மீள அறவிடுவதற்கான நடவடிக்கைகள் கணணி நிகழ்ச்சி மூலம் மேற்கொள்ளப்படுவதனால் குறித்த அறவீடுகள் அடங்கிய உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு விபரங்களைக் ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்குதல் வேண்டும்.

03. மீளாய்வின் பின்னர் தற்சமயம் வழங்கப்படும் ஓய்வூதியத்தினையே வழங்குதல்.

ஓய்வூதிய மீளாய்வின் பின்னர் ஓய்வூதியர் தற்சமயம் பெறும் சம்பளம் அதிகரிக்காத சந்தர்ப்பங்களில் கீழ்வரும் வண்ணம் கருமமாற்றுதல் வேண்டும்.

- சம்பள மாற்றம் சரியாயிருப்பினும் படிகளைச் சீராக்குகையில் மொத்த ஓய்வூதியம் குறைவடையின், அவ்வாறு சம்பளம் குறைவடையும் மீளாய்வுகள் தொடர்பில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும்.
- தற்சமயம் வழங்கப்படும் ஓய்வூதியம் தவறாவதன் காரணமாக மொத்த ஓய்வூதியம் அதிகரிக்காத சந்தர்ப்பங்களின் போது முன்னைய சம்பள மாற்றத்தினைத் திருத்தியமைத்ததன் பின்னர் மீளவும் 06/2006 இன் படி மீளாய்வு செய்து சரியான சம்பளத்தில் அமர்த்துதல்.

04. ஓய்வூதியத்தினைச் சீராக்குவதுடன் தொடர்புறும் ஆவணம்.

- ஓவ்வொரு பிரதேச செயலகத்திற்குமான ஓய்வூதியச் சீராக்கத்துடன் தொடர்புறும் ஆவணம் மத்திய தரவுத் தொகுதியில் காட்டப்பட்டுள்ளது.
- அவ் ஆவணத்தில் ஓய்வூதிய மீளாய்வு உரித்தற்ற ஓய்வூதியர்கள் இருப்பின் அவர்களை ஆவணத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
- ஆவணத்தில் உள்ளடங்காத, எனினும் ஓய்வூதியர் ஆவணத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஓய்வூதியர்கள் பற்றிய விபரங்களை **hasitha@pensions.gov.lk** இடத்தே அனுப்பி அவற்றினை உள்ளடக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- பிரதேச செயலகங்களுக்கிடையே ஓய்வூதியர்கள் இடமாறும் சந்தர்ப்பங்களில் பிரதேச செயலக ரீதியில் சீராக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- பிரதேச செயலகங்களுக்கிடையே இடமாற்றியிருப்பின் கோவையினை குறித்த பிரதேச செயலகத்திடத்தே உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

05. மீளாய்வு செய்திருப்பினும் கொடுப்பனவு செய்யப்பட்டிராத மீளாய்வுகள் தொடர்பில் கீழ்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- ஈடு செய்ய முடியாத சம்பளமற்ற விடுமுறைகள் அல்லது அதன் படி சீராக்கப்பட்ட மொத்தச் சதவீதத்தினைத் திருத்துதல் வேண்டும்.
- கொடுப்பனவிற்காகக் கையாளப்படும் தரவுகள் உள்ளடங்கும் வண்ணம் Modification date மாறுபடுதல் வேண்டும்.

06. ஓய்வூதியச் சீராக்கங்களுடன் தொடர்புறும் சம்பளத் திட்டங்கள்.

பல்வேறுபட்ட திணைக்களங்களைச் சாரும் பதவிகளுக்கான சம்பளத் திட்டங்களைத் தற்சமயமாகுகையில் திணைக்கள இணையத் தளத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இணையத் தளத்தில் குறிப்பிடப்படாத திணைக்களம் சார் பதவிகளுக்கு, சம்பளங்கள் ஆணைக்குழுவிடமிருந்து விபரங்களைப் பெற்றதன் பின்னர் அவை இணையத் தளத்தில் வெளியிடப்படும். அது வரையில் உத்தியோகத்தர் இறுதியாகப் பணிபுரிந்துள்ள நிறுவனத்தினை வினவி ஓய்வூதியத்தினைத் தயாரிக்க அடிப்படையாகக் கொள்ளப்படும் தகவல்களைப் பெற்று ஓய்வூதியத்தினைக் கணிப்பிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**07. 06/2006 ஓய்வூதியச் சீராக்கங்களைக் கணிப்பிடும் விசேட சந்தர்ப்பங்களின் போது.**

கீழ் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புறும் ஓய்வூதிய மீளாய்வுகளை மேற்கொள்ளுகையில் கணணி நிகழ்ச்சி மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்குறிகளைத் தெரிவு செய்து அதன்படி சம்பள மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2-7 இன் படி ஓய்வு பெற்றுள்ள சந்தர்ப்பங்களில் (பதவி வழக்கொழிதலின் கீழ்) (Pension Minute 2.7)

ii. 25 வருடங்களிலும் குறைந்த சேவைக்காலத்துடன் 01-01-1997 ஆந் திகதி அல்லது 2-15, 2-12 இன் கீழ் ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதியர்கள் (ஒழுக்காற்றுக் காரணங்கள் மற்றும் வினைத்திறனின்மை காரணமாக) (Pension Minute 2.7/2015)

iii. மேன்முறையீட்டு, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியங்கள் (Supremacy appeal court judge)

iv. மேல் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியங்கள் (High Court Judges)

v. நீதிமன்ற/ சட்ட உத்தியோகத்தர்களின் ஓய்வூதியங்கள் (Court/ Lawyers)

vi. ஆயுதப்படை நலிவுநிலை ஓய்வூதியத்துடன் சேவை ஓய்வூதியத்தினையும் ஒருங்கிணைத்து 06/2006 மீளாய்வினை மேற்கொள்ளுகையில் (Forces disabilities)

vii. 50% விதவைகள் ஓய்வூதியத்தினை வழங்குகையில் (50% W&OP)

viii. பொலிஸ் நலிவுநிலை ஓய்வூதியத்துடன் ஓய்வூதியத்தினையும் ஒருங்கிணைத்து 06/2006 மீளாய்வினை மேற்கொள்ளுகையில் (Police disabilities)

ix. "ட" உப அட்டவணையில் அடங்கும் உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் ("ட" Schedule)

x. அரச சேவைக்குப் புறம்பான அமைச்சின் செயலாளர் பதவியின் ஓய்வூதியம் (Secretary post excepts)

xi. ஆயுதப்படை விதவைகள் மற்றும் சேவை ஓய்வூதியங்கள் (Forces W&OP Service)

xii. ஓய்வு பெறும் திகதி மற்றும் கொடை ஆரம்பமாகும் திகதி வேறுபடும் சந்தர்ப்பங்களில் (Difference dates award & payments)

xiii. கணணி நிகழ்ச்சியின் மூலம் சரியாகக் கணிப்பிட முடியாத பிற சந்தர்ப்பங்கள் (Other)

xiv. 7/2000 இன் படி விதவைகள் ஓய்வூதியத்தினைக் கணிப்பிடுதல் (W&OP on 7/2000)

xv. பிரிந்து செல்லும் ஓய்வூதியங்களை வழங்குகையில் (Divided Pension)

இச்சந்தர்ப்பங்களின் போது சரியாக ஓய்வூதியத்தினைச் சீராக்கும் பொருட்டு மத்திப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியில் விசேட வசதிகள் பெற்றுத் தரப்படும். அங்கு தரவுகளை உள்ளடக்க முன்னர் 5/2015 சுற்றுநிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள PDC/5/2015/2 மாதிரிப்படிவத்தினை பூரணப்படுத்தி அங்கீகரித்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாதத்திலும் மேற்கொள்ளப்படும் மீளாய்வுகளை PDC/5/2015/3 சாராம்சத்துடன் PDC/5/2015/2 இன் பிரதியினையும் கோவையிடல் வேண்டும். PDC/5/2015/2 மூல மாதிரிப் படிவத்தினை ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்குதல் வேண்டும்.

**08. கோவைகள் இல்லாத/ தகவல்கள் அற்ற மற்றும் ஓய்வூதிச் சுற்றுநிருபம் 2/2006 இன் படி சம்பளத்தினை ரூ. 51840.00 இல் வைத்துக் கணிப்பிடப்பட்ட கோவைகள் தொடர்பில் கருமமாற்ற வேண்டிய விதம்.**

இவ் ஓய்வூதியக் கோவைகள் தொடர்பில் 25-08-2015 ஆந் திகதி இடம் பெற்ற கலந்துரையாடற் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதனால் அதன் படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**09. ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியம் மற்றும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம்.**

ஓய்வூதியச் சுற்றுநிருபம் 5/2015 (II) இன் அறிவுறுத்தல்களின் படி சேவை ஓய்வூதியங்களுடன் தொடர்புறும் விபரங்களை நேரடியாகவே குறித்த ஆயுதப்படைகளிடம் பெற்று ஓய்வூதியத் திணைக்களத்தினால்

கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறாயினும் கீழ் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்ய முடியாது.

- ஆயுதப்படை நலிவுநிலை ஓய்வூதியத்துடன் சேவை ஓய்வூதியத்தினையும் ஒருங்கிணைத்து வழங்குகையில்.
- கணணித் தரவுத் தொகுதியில் ஓய்வூதிய இலக்கத்தினை இனங்காண முடியாவிடில்.

ஆதலால் ஆயுதப்படை நலிவுநிலை ஓய்வூதியத்துடன் சேவை ஓய்வூதியத்தினையும் ஒருங்கிணைத்து வழங்கும் சந்தர்ப்பங்களின் போது ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்து 9/2008 ஓய்வூதியச் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் படி ஒருங்கிணைத்துக் கணிப்பிடுதல் வேண்டும். சேவை ஓய்வூதியம் மற்றும் ஆயுதப்படை விதவைகள் ஓய்வூதிய வழங்கலுடன் தொடர்புறும் ஆயுதப்படை உத்தியோகத்தரின்/ ஏனைய நிலைகளின் உத்தியோக இலக்கம்/ பெயர் தரவு மூலத்தில் குறிப்பிடப்படும் வண்ணம் ஓய்வூதிய இலக்கத்தினைக் குறித்த ஆயுதப்படையிடம் அனுப்புதல் வேண்டும்.

**10. பொதுவான விடயங்கள்.**

- 2015 திசெம்பர் மாதம் முதல் கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட மீளாய்வுகளுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதனால் அனைத்துப் புதிய மீளாய்வுகள் மற்றும் திரும்பவும் மேற்கொள்ளப்படும் மீளாய்வுகளுக்கு கணக்காளரின் உறுதிப்படுத்தல் கட்டாயமானதாகும்.
- தற்சமயமாகுகையில் அனுப்பப்பட்டுள்ள error comment தொடர்பில் துரிதமாகச் செயற்படல்.
- ஓய்வூதிய இலக்கங்களின் குறியீடுகள் அல்லது இலக்கங்களில் தவறுதகள் காணப்படினும் தற்சமயம் தரவு மூலத்தில் காணப்படும் ஓய்வூதிய இலக்கத்தின் கீழேயே ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்தல்.
- தங்க நாணய ஓய்வூதியம்/ ரூபாய் பெறுமானத்தின் கீழ் கணிப்பிடப்பட்ட ஓய்வூதியம்/ நட்டஈட்டு ஓய்வூதியம்/ வாழ்நாள் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ஓய்வூதியம் ஆகியவற்றுக்கு இம் மீளாய்வுகளை மேற்கொள்ள முடியாது.
- பிரித்தளிக்கப்படும் ஓய்வூதியம் மற்றும் 50% வழங்கப்படும் ஓய்வூதியங்களின் போது முன்னர் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி கொடுப்பனவுகளைப் பிரித்தளித்தல் வேண்டும்.
- நற்சேவை/ காயக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்குப் புறம்பான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
- பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 6/2006 மீளாய்வுகள் தொடர்பிலான மேலதிகக் கொடுப்பனவுகளை மீள அறவிடுகையில் மீளளிப்பு இலக்கம் 06 இன் கீழ் revision surcharge என மேற்கொள்ளுதல் வேண்டும்.
- இவ் ஓய்வூதிய மீளாய்வுகள் தொடர்பில் நிலுவை ஊதியங்களை வழங்கும் பொருட்டு AR/Source document அனுப்புதல் கூடாது.

(ஒப்பம்)
எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:
01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
03. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.
04. செயலாளர் - நிதி அமைச்சு.
05. கணக்காய்வாளர் நாயகம். - தகவலுக்காக